சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 01.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 47/E/2024 & CP 23/E/2024**

திரு.திருமாறன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
தர்மபுரி மாவட்டம்.

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 18.02.2026 மற்றும் 28.04.2026 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. 28.04.2026 அன்று இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.வெ.சத்தியப்பிரியா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தருமபுரி அவர்கள் இவ்வாணையத்தில் 01.06.2026-ல் நேரில் ஆஜராகி, 29.05.2026 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர், தருமபுரி அவர்களின் அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 28.04.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 19(8)(b)-ன்கீழ் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வங்கி வரைவோலையாக (எண்.001380, நாள் 27.05.2026) மனுதாரருக்கு அனுப்பப்பட்டு, மனுதாரர் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் இணையதள நகலுடன் கூடிய அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையினை ஆணையம் ஏற்று, 28.04.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின்

உத்தரவின்படி மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 47/E/2024 & CP 23/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், தர்மபுரி மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.திருமாறன், த/பெ.மனோகரன்,
1/3-1, சிராஜப்பேட்டை, செட்டிக்கரை (அஞ்சல்),
தருமபுரி வட்டம் மற்றும் மாவட்டம்- 636 704.

Copy to: File MP/PA,